மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் , திருவொற்றியூர்

**OS.No. 365/2007**

இந்நீதிமன்றத்து மூன்றாம் நிலை எழுத்தர் திரு.சங்கர்கணேஷ், அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 29-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

தேதி - **29.10.2025**

பெயர் - ராஜேஸ்வரி

க/பெ - பக்தவசலம்

தொழில் - இல்லத்தரசி

ஊர் - திருவொற்றியூர்

வயது - **60**

சாட்சி - PW1

விசாரணை தொடங்கும் நேரம் : **03.20 P.M**

குறுக்கு விசாரணை :-

**1.** வழக்கு சொத்து சாத்தாங்காடு கிராமம் சர்வேஎண்.173/1 ல் உள்ளதாக வழக்கு சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் உள்ள அடிமனை எத்தனை சதுரஅடி இருக்கும் என்றால் 1000 சதுரஅடி இருக்கும். என்னுடைய கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் பத்தி எண் 3 ல் சர்வேஎண்.173/1 ன் மொத்த விஸ்தீரணம் 25 ஏக்கர் 93 செண்ட் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2. மொத்த விஸ்தீரணம் 25 ஏக்கர் 93 செண்ட் வழக்கு சொத்தின் நான்கெல்லைகள் மற்றும் நான்கு பக்க அளவுகள் வாதுரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் எனக்கு தற்பொழுது ஞாபகம் இல்லை. வழக்கு சொத்தை அடையாளம் காட்டும் விதமாக நான்கெல்லைகள் மற்றும் நான்கு பக்க அளவுகள் வாதுரையில் குறிப்பிடாத காரணத்தினால் நான் இவ்வழக்கில் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கது அன்று என்று பிரதிவாதிகளின் பதிலுரையில் பத்தி 3 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் வழக்கு சொத்து எங்களுக்கு சொந்தமானது என்று வழக்கு தொடர்ந்துள்ளேன்.

3. வழக்கு சொத்து எங்களுக்கு உரிமையானது என்று உரிமை விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் தவறு கேட்டுள்ளேன். பிரதிவாதிகளின் பதிலுரையில் நான்கெல்லைகள் மற்றும் நான்கு பக்க அளவுகள் குறிப்பிடவில்லை என்று பதிலுரையில் தெரிவித்தும் வாதுரையை திருத்தம் செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் வழக்கு சம்மந்தமான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோம். வாதுரையை திருத்தம் செய்வதற்கு மனு ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். வாதுரையை திருத்தம் செய்யவில்லை வழக்கிற்காக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

4. இவ்வழக்கு ஏழுமலை மனைவி E.சுலோச்சனா மற்றும் அவரின் நான்கு மகன்கள் மீது தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கணேசன் என்பவர் என்னுடைய தந்தையாரா என்றால் ஆமாம். முதல் பிரதிவாதி E.சுலோச்சனா அவர்களின் வீடு இருந்த மனைப்பகுதியில் தான் எனது தந்தையாரின் வீடு இருந்தது என்றால் சரிதான். எனது தந்தையார் கட்டிய கட்டிடம் தவிர V.சுலோச்சனா, பக்தவசலம் மற்றும் துளசி ஆகியோரின் வீடுகளும் E.சுலோச்சனாஅம்மா மனையின் பகுதியில் தான் உள்ளன என்றால் சரிதான்.

5. V.சுலோச்சனா, பக்தவசலம், கணேசன் மற்றும் துளசி ஆகிய நால்வரும் இவ்வழக்கின் முதல் பிரதிவாதிக்கு எதிராக பொன்னேரி உரிமையியல் நீதிமன்றத்தில் நிரந்தர தடை உத்தரவு கேட்டு வழக்கு எண்:264/1992 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. மேற்கண்ட வழக்கு இந்நீதிமன்றத்திற்கு வழக்கு எண்:484/1997 என மாற்றப்பட்டு பின்னர் வாதிகள் வராத காரணத்தினால் மேற்கண்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்று பதிலுரையில் பத்தி எண் 6 ல் தெரிவித்த பிறகு மேற்சொன்ன விவரத்தை கேட்டு தெரிந்து கொண்டீரா என்றால் தற்போது வரை அது குறித்து கேட்டு தெரிந்துகொள்ளவில்லை.

6. தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கு எண்: 484/1997 ஐ வரிசைக்கு கொண்டு வர மனுதாக்கல் செய்து, அந்த மனு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலத்தில் நிலுவையில் இருந்தது என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரை பத்தி எண்:6 ல் கூறப்பட்ட மேற்சொன்ன விவரத்தை ஒரு பதில் வழக்குரைதாக்கல் செய்தோ அல்லது முதல் விசாரணை பிரமாண பத்திவாக்குமூலத்திலோ மறுக்கவில்லை என்றால் அது குறித்து என்னுடைய வழக்கறிஞருக்குத்தான் தெரியும்.

7. E.சுலோச்சனா அவர்களின் தாயார் பெயர் பட்டம்மாள் என்றால் பெயர் எனக்கு தெரியாது, அவர்களை நான் பார்த்ததில்லை. E.சுலோச்சனா அவர்களின் தாயார் பட்டம்மாள் மற்றும் இவ்வழக்கின் பிரதிவாதிகள் 2 முதல் 5 ஆகியோர் V.சுலோச்சனா, பக்தவசலம், கணேசன் மற்றும் துளசி ஆகிய நால்வருக்கு எதிராக சுவாதீனம் பெற பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் எண்:104/1998 என்ற வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

8. பொன்னேரி சார்பு நீதிமன்றத்தின் வழக்கு எண்: 104/1998 ல் வாதிகள் அடிமனை வாதிகளுக்கு சொந்தம் என்ற அடிப்படையில் தாக்கல் செய்தார் என்றால் தெரியாது. என்னுடைய தகப்பனார் கணேசன், பக்தவசலம்,V.சுலோச்சனா மற்றும் துளசி ஆகியோர் அவ்வழக்கில் எதிர்சாட்சியம் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு எண்: 104/1998 அந்த வழக்கு வாதிகள் வராததால் தள்ளுபடி செய்யப்பட்டு அந்த வழக்கை மீண்டும் கோப்பிற்கு கொண்டுவர தாக்கல் செய்யப்பட்ட மனு இந்த நீதிமன்றத்தில் மறுபடியும் தாக்கல் செய்யப்பட்டது என்று பதிலுரை பத்தி எண் 7 ல் கூறிய விவரம் உண்மைதானே என்றால் எனக்கு அது குறிது தெரியாது.

9. மேற்சொன்ன விவரத்தை பதிலுரையை பார்த்த பிறகு கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். மேற்படி மனு இந்நீதிமன்றத்தில் மனு எண்: 01/2022 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு அந்தமனுவில் எதிர்மனுதாரர் கணேசனின் வாரிசுதாரர்கள் என்ற முறையில் இந்த வழக்கில் வாரிசுதாரர்கள் ஆஜராகி உள்ளோம் என்றால் சரிதான். நீதிமன்றம் மூலமாக சுவாதீனம் பெற வழக்கு தொடர்ந்துள்ள நிலையில் 2007 ம் ஆண்டில் வாதிகளின் சுவாதீனத்தில் தலையீடு செய்ய எந்தவிதமான முகாந்திரமோ அல்லது தேவையோ இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கை நான் தொடர்ந்துள்ளேன்.

10. இவ்வழக்கை எந்த தேதியில் நடந்த சம்பவத்தின் அடிப்படையில் தாக்கல் செய்தேன் என்றால் அது குறித்து என் வழக்கறிஞருக்குத்தான் தெரியும். இவ்வழக்கு தாக்கல் செய்ததற்கு எவ்விதமான முகாந்திரமோ இல்லாத காரணத்தினால் தான் என்னால் எந்த தேதியில் சம்பவம் நடைப்பெற்றது என்று என்னால் பதிலளிக்க முடியவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் அடிமனையில் எங்களுக்கு உரிமையுள்ளது என்று வாதுரையில் எங்கும் குறிப்பிடப்படவில்லை என்றும் அதற்காக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன்.

11. வழக்கு சொத்தில் என்னுடைய முன்னோர்கள் காலத்தில் இருந்து இருந்து வருகிறோம் என்று வாதுரையில் சொல்லியிருந்தாலும் அவ்வாறான முன்னோர்களின் பெயர்கள் விவரம் மற்றும் எந்த வருடத்திலிருந்து அனுபவத்திலிருந்து வருகிறார் என்ற விவரத்தை கூறவில்லை என்றால் சரியல்ல விவரத்தை கூறியுள்ளேன். சாத்தாங்காடு கிராம செட்டி தெருவை ஒட்டியுள்ள வேறு பகுதியில் அனுபவத்தில் இருந்த வந்த எனது தந்தையார் பிரதிவாதிகளின் குடும்ப மனையில் ஆக்கிரமிப்பு செய்துவிட்டார் என்றால் சரியல்ல. ஏற்கனவே பிரதிவாதிகள் சுவாதீனம் பெற வழக்கு தொடர்ந்துள்ள நிலையில் நிரந்தர தடை உத்தரவு மட்டும் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிந்தது)

விசாரணை முடியும் நேரம் :- **04.30 P.M.**